அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் III.] DECEMBER, 1903–ஹூ டிசெம்பர். [இலக்கம். 4.

தேச ஸஞ்சாரஞ் செய்யும் பறவைகள்.

பக்ஷிகள் தேச ஸஞ்சாரஞ் செய்கிற அதிசயத்தைச் சற்று யோசித்துப் பார்ப்போமானால் வெகு விநோதமாயிருக்கும். அநேகம் பக்ஷிகள் வெகுதூரம் பிரயாணம் போகின்றன. அவை கோடைகாலத்தில் வஸிக்கப் பெருங் கடலைத் தாண்டி சீததேசங்களுக்குப் போயிருந்து, மறுபடியும் கோடை கழித்தவுடனே சீதகாலத்தில் உஷ்ண தேசங்களுக்கு வந்து சேருகின்றன. இன்னவழியாய் இன்ன விடத்திற்குப் போகிறதென்று அறியப் பூகோளப்படமும் திசையறி கருவியுங் கையில் வைத்திருக்கிற மனிதர்களே வழிதெரியாமல் பல விடங்களில் தடுமாறும்பொழுது, இப்படிப்பட்ட ஸாதனங்கள் ஒன்றுமில்லாத எளிய பக்ஷிகள் அவ்வளவு தூரதேசங்களுக்கு யாத்திரை போகின்றனவென்றால், இது மிகவும் ஆச்சரியமல்லவா?

சாதாரணமாய்ப் பக்ஷிகள் சிற்சில விடங்களில் ஆற்றோரமாயாவது கடற்கரை யோரமாகவாவது குறிபார்த்துக்கொண்டு போகின்றனவென்று நினைக்கலாம்; ஆயினும், கரைதுறை யொன்றும் கண்ணுக்குத் தெரியாமலே வெகுதூரம் பெரிய சமுத்திரங்களைக் கடந்து போகின்றனவே, அவ்விடத்தில் அவைகளுக்கு வழிகாட்டி யேது? பிரதி வருஷமும் அந்தப் பக்ஷிகள் ஒரே இடத்திற்கே போய்த் திரும்பி வருகின்றன; முன் வருஷம் கட்டிவைத்த கூட்டையே யாத்திரைபோய் வந்தபின் மறு வருஷமும் உபயோகித்துக்கொள்ளுகின்றனவே!

அதிக வேகமாகப் பறக்கிற பெரிய பறவைகள் பகற்காலத்தில் பயமில்லாமலே பறந்துபோகின்றன; மிகச் சிறியவைகளான பக்ஷிகளோ, இராத்திரி வருமளவும் காத்திருந்து இராக்காலங்களிலேயே பிரயாணம் போகின்றன. அவை இருளுக்கு அஞ்சுவதில்லை; பகையான பெரிய பக்ஷிகளின் கண்ணில் அகப்படாமல் சிறுபறவைகள் பறந்துபோகக் கூடிய கால மிராத்திரியேயாம். ஆகையால், சூரியன் அஸ்தமித்து இராப்பொழுது வந்தவுடனே அவை ஆகாயத்தில் பறந்து பிரயாணம்போகின்றன.

ஆகாயத்தில் மப்புமந்தார மில்லாமல் நிர்மலமாயிருக்கிற இராத்திரிகளில் நிலவு காயும்பொழுது தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாய்ச் சந்திரனுக்கு அருகே பார்ப்போமானால் சிறு பறவைகள் பறந்து பிரயாணம் போவது கண்ணுக்குப் புலப்படும்; சந்திரனுக்குக் குறுக்காக ஈக்கள் பறப்பது போல் அவை நமது கண்களுக்குத் தோன்றும்.

அன்னம், கொக்கு, நாரை முதலான மிகப் பெரிய பக்ஷிகள் அதிவேகமாகப் பறக்கின்றன; அவை ஒரு மணிக்கு நூறு மைல் வீதம் பறக்கின்றனவென்கிறார்கள். சிறிய பறவைகளோ, அதில் பாதிக்கும் குறைவான வேகமாகவே பறந்துபோகும்.

இரவில் பறந்துபோகும் பக்ஷிகள் பூமிக்குமேல் அதிக உயரத்தில் பறக்கின்றன; இரண்டு மூன்று மைல் உயரத்திற்கு மேலேதான் பறக்கும். பெரிய மலைமேலாவது கோபுரம் விளக்குக்கூடு முதலான கட்டடங்களின் மேலாவது ஏறிப் பார்ப்போமானால், அப்போதும் அவை நமது கண்ணுக்கெட்டாத தூரத்தில் பறப்பதைக் காணலாம்.

இப்படி ஆகாயத்தில் அதிக உயரத்திலே பறக்கும் பக்ஷிகள், வெகுதூரத்திற் கப்பால் பூமியிலுள்ள அதிசயங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே போகும். இராத்திரியில் நிலவு வெளிச்சத்திலும் நக்ஷத்திரங்களின் வெளிச்சத்திலும் கடல் நீர் பளபளவென்று பிரகாசிப்பது அவைகளுக்குத் தோன்றும்; இருண்ட இராத்திரிகளில் அவைகளுக்கு வழியைக் கண்டுகொள்ள, இதுவே உதவியாகும்.

ஆனால், ஐயோ! மழை பெய்கையிலும் பனி மூடிய இராத்திரிகளிலும், வழிதெரியாமல் பறவைகள் ரொம்பவும் வருத்தப்படும். இதுதான் பிரயாணம் போகிற சிறிய பறவைகளுக்கு மிகவும் பொல்லாத காலம். நடுக்கடலில் போகும்பொழுது இப்படிப்பட்ட ஸங்கடம் நேரிட்டால் அவை வழிதெரியாமல் வருத்தப்பட்டுக் கடலிலே விழுந்து முழுகிப்போய்விடும்; சில பக்ஷிகள் பறக்கமுடியாமல் சிறகுகள் நன்றாய் நனைந்துபோய் அப்படியே கீழே வீழ்ந்துபோவதுண்டு. அப்படிப்பட்ட தருணங்களில் பூமிக்கு நேராகப் பறந்துபோனால் ஏதேனும் ஒரு மரத்தில் போய்ப் பதுங்கிக்கொள்ளலாம்; நடுக்கடலில் போகும்பொழுது இப்படி நேரிட்டால், அவை யென்ன செய்யும்? அங்கு ஏதாயினு மொரு விளக்குக்கூடு காணப்பட்டால், அதில் போய் அடைக்கலம் புகும். அவ்விடத்திலும் விளக்கின் சூடு தாங்காமல் சிறு பறவைகள் பல இறந்துபோவதுண்டு.

பக்ஷிகள் இராக்காலத்தில் இப்படிப் பறந்துபோகும்பொழுது எல்லாம் கலகலவென்று கூச்சலிட்டுக்கொண்டே போகும்; ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து போகாமல் எல்லாம் ஒன்றுசேர்ந்து போவதற்கு இதுவே அவைகளுக்குப் பெரிய ஸஹாயமாகும். பறவைகள் பிரயாணம் போகிற காலமாகிய கோடைகாலத்தில் நிச்சப்தமான இரவுகளிலே சற்றுக் கவனமாகக் காதுகொடுத்துக் கேட்பீர்களானால், பறவைகள் வேகமாய்ப் பறந்துபோகையில் கூவுகிற கூச்சல் நன்றாய்க் கேட்கும்.

இப்படி இராத்திரியெல்லாம் பிரயாணஞ் செய்து, பொழுது விடிந்தபோது அந்தப் பக்ஷிகள் பூமியில் வந்திறங்கும். இராத்திரி முழுமையும் பறந்துகொண்டிருந்ததனால், அவைகள் மிகவும் சோர்வடைந்துபோயிருக்கு மென்று நீங்கள் நினைப்பீர்களல்லவா? அவைகள் அவ்வளவு சோர்ந்து போனதாகத் தோற்றுவதில்லை; ஆயினும் அதிகமான பசியுடையவைகளாகிக் கீழே இறங்கினவுடனே வயிற்றுக்கு ஏதாவது உணவு தேடத் தலைப்படும்.

பிரயாணஞ் செய்யும் பக்ஷிகள் இப்படிக் காலையில் கொஞ்சம் இரைதேடித் தின்று சற்றுநேரமிளைப்பாறி யிருந்து, பகலில் மறுபடியும் தீனி தேடப் புறப்படும்; அன்று இராத்திரியும் அவை மறுபடி பிரயாணம்போகவேண்டுமாகையால், அதற்குச் சக்தியுண்டாகும்படி வயிறுநிறையத் தீனி தேடித் தின்று சித்தமாயிருக்க வேண்டுமல்லவா?

இப்படிப்பட்ட அற்புதமான சாமர்த்தியத்தைப் பக்ஷிகளுக்குக் கற்பித்தது யார்? ஸகல ஜீவ தயாபரரான கடவுள் அளித்த இயற்கை யறிவினாலேயே யன்றோ அவைகள் இப்படிப்பட்ட அசாத்தியமான காரியங்களைச் செய்து உயிர்வாழ்ந்து நமக்குப் பலவிதமான நன்மைகளையும் விநோதத்தையும் விளைவிக்கின்றன? இப்படிப்பட்ட அருமையான ஜீவன்களை அன்புடனே ஆதரித்துப் போஷிக்க வழிதேடாமல், அவற்றிற்குப் பலவிதமான துன்பங்கள் செய்வதோடு, அவற்றைக் கொன்றும் தம் வயிற்றை நிரப்புகிற கொடிய பாபிகள் கடவுளுடைய கடாக்ஷத்திற்கு ஒருபோதும் பாத்திரராக மாட்டார்கள்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.'

ஐந்து ஸம்ரக்ஷணத்தைப்பற்றிய நாநா விஷயங்களும் குறிப்புகளும்.

1. பூனையைப்பற்றிய ஒரு உண்மையான கதை.—ஒரு பெரியவர் தாம் வளர்த்த பூனையின் நன்றியறிதலைப்பற்றி அடியில் வருமாறு சொல்லுகிறார். என்னிடத்திலிருந்த ஒரு பூனை பிரதிதினம் போஜனகாலத்தில் தப்பாமல் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து என்னோடுகூடவே தனக்கு வேண்டிய உணவுகளைத் தின்னும்; அதற்கு வைத்த உணவுகளையெல்லாம் அது தின்றுவிட்டால், நான் என் உணவில் அதற்குக் கொஞ்சமெடுத்து வைப்பேன். இப்படி நடந்துவருகையில் ஒருநாள் போஜன சமயத்தில் பூனை அவ்விடம் வந்து சேரவில்லை; சற்றுநேரம் காத்திருந்தும் பூனை வந்து சேராமையால் அதை விட்டு நாங்கள்மாத்திரமே தனியாகப் புசிக்க உட்கார்ந்தோம். எங்களுக்குப் போஜனம் பரிமாறுகிற ஸமயத்தில் அந்தப் பூனை இரண்டு எலிகளைப் பிடித்து வாயில் கவ்விக்கொண்டு அதிக வேகமாயோடிவந்தது. வந்தவுடனே அது அந்த எலிகளிலொன்றை நான் புசிக்கும் பாத்திரத்தில் வைத்து மற்றொன்றைத் தனக்கு வைத்துக்கொண்டு தன்னிடத்தில் உட்காந்தது. நான் தினந்தோறும் என் போஜனத்தில் அதற்குப் பங்கிட்டுக் கொடுப்பதைப் பார்த்து 'மருந்தேயாயினும் விருந்தோடுண்' என்று சொல்லியபடி, பிறருக்கு இட்டுத் தாமும் புசிக்க வேண்டுமென்கிற நற்குணத்தை இந்தப் பூனை தெரிந்துகொண்டதல்லவா? இப்படிப்பட்ட பூனைகளையோ வளர்ப்பவரிடத்தில் விசுவாஸமில்லாதவை யென்று பழிப்பது? என்று சொல்லுகிறார்.

2. பூனை கபடமற்றதா, கள்ளச் சிந்தையுடையதா? — பூனைகளை நாம் எவ்விதமாக நடத்துகிறோமோ, அதற்குத் தகுந்தபடியே அவை நற்குணமும் துர்க்குணமு முடையவையாகின்றன. பூனையானது கூச்சமுள்ள பிராணியாம். கூச்சமுள்ளதாயிருப்பது துர்க்குணமாகுமா? எதற்கும் பயப்படு

கிற பிராணிகளுக்கே கூச்ச மதிகமாயிருக்கும். அப்படிப் பயப்படுவது பெருந்தன்மையேயொழிய இழிகுணமன்று. அப்படிப்பட்ட பிராணிகளைப் பட்சமாக நடத்தினால், அவை கபடமற்றுப் போஷிப்பவரிடத்தில் மிகுந்த பிரீதி யுடையவைகளாகும்; கொடுமையாக நடத்தினால் அதனிடமுள்ள பெருந்தன்மை போய்ச் சூதும் கெட்ட நினைப்பு முள்ளவையாகும். பெருமை உண்டாவதும் சிறுமை யுண்டாவது மெவருக்கும் ஸகவாஸதோஷமே தவிர வேறொன்று மல்ல.

3. **ஜீவகாருணியத்தைப்பற்றிய பிரஸங்கம்.**— உபாத்தியாயர்களும், மதாசிரியர்களும், மதபோதகர்களும், சமயம் நேரிடும்போதெல்லாம் ஜீவகாருணியத்தைப்பற்றிப் பிரஸங்கஞ்செய்து தாமும் மேல்வரிச்சட்டமாக நடப்பார்களானால், உலகத்தில் நாகரிகம் வெகு சீக்கிரமே விருத்தியாகுமென்பதில் ஸந்தேகமில்லை; சிலர் இந்த விஷயத்தைச் சிறிதும் கவனிப்பதேயில்லை; தாம் நடத்தியும் காட்டுவதில்லை; பிறருக்கும் போதிப்பதில்லை. இதற்கு நேர்விரோதமாக, சமயகுருவாயிருந்த ஒருவர் பறவைகளைச் சுடுவதே தமக்கு நல்ல பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். ஆனால், அதற்கேற்ற தண்டனையை அவர் அடையாமற்போனாரோ, இல்லை; அந்தக் கொடுமைக்காக அவர் 50 ரூபாய் அபராதம் கொடுத்ததோடு ஒரு நாள் கடுங்காவலிலு மிருக்க நேரிட்டது. அப்படி அவர் காவலி லிருந்தபோது, தாம் அநியாயமாய்க் கொன்ற பாடும் பக்ஷிகளுடைய பரிதாபத்தை நினைத்திருப்பாரோ, நினைத்திராரோ யாம் அறியோம். உலகத்தில் எல்லா உயிர்களிடத்திலும் ஒரு தன்மையாய் அன்பு பாராட்டவேண்டுமென்கிற பொதுவான சட்ட மேற்பட்டு ஆளப்படும்போதுதான் இத்தேசம் நாகரிக விருத்தியும் செழிப்பு முடையதாகும்.

4. **ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தாருக்குப் பொருளுதவி யேது?** — வாயில்லா ஜந்துக்களுடைய வருத்தத்தைப் போக்கப் பாடுபடுகிறவர்களுக்குப் பொருளுதவியில்லை யென்கிற விசாரமேன்? ஜீவகாருணியமுள்ள ஒவ்வொருவரும், நம்மிடத்தில் நேசம் மாறாதவைகளும் நமக்கு மிகவும் உபயோகமுள்ளவையுமான நாற்கால் ஜந்துக்களிடத்தில் நன்றிபாராட்டி அவைகளுடைய ஸம்ரக்ஷணத்திற்காக வருஷந்தோறும் சிறிதளவு பொருள் கொடுத்து உதவத் தலைப்பட்டால், அளவற்ற பொருள் மூலதனம் சேர்ந்துபோகுமே. அப்படிப்பட்ட ஜீவகாருணியமுள்ள பிரபுக்கள் வெளிக்கு வரவேண்டுமென்றே நாம் முக்கியமாக வேண்டிக்கொள்ளுகிறோம்.

'அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.'

5. **நாயினிடத்து அன்பு.**—நாய்களை யெப்பொழுதும் கட்டிப்போட்டு வைக்கலாகாது; கட்டிவைக்கும் நாய்கள் மந்தபுத்தியும் கோபகுணமும் முரட்டுத்தனமு முள்ளவையாகும்; ஆகையால், நாய்களைக் கட்டிப்போடுவது கொடுமையான காரியமேயாம்; வீட்டில் வளர்க்கும் நாய்களை நாளைக்கு இரண்டு தரம் வெளியி லோட விடவேண்டும்.

கிழமாகிப் பலவீனப்பட்ட நாய்களைத் தனியே தெருக்களில் திரிய விடலாகாது. கிழமான நாய்களை இழந்துபோவதும், அல்லாடவிடுவதும் மிகவும் பரிதாபமான செய்கையாம்.

நாய்கள் தெருக்களி லோடிப் பூனைகளோடாயினும் சிறிய நாய்களோடாயினும் சண்டைபோட்டு அவைகளைக் கொல்லும்படி விடலாகாது. இந்தக் கெட்ட வழக்கமானது, அந்த நாய்க்கும் நாயின் சொந்தக்காரனுக்கும் வீணான ஸங்கடத்தை யுண்டாக்கும்; ஒருவேளை அந்த நாயின் உயிருக்கே அதனால் அபாயம் நேரிட்டாலும் நேரிடும்.

6. **ஜீவகாருணியத்தை வெளியிடுதல்.** — உணவுக்காக வெளியே திரிந்து தவித்துத் தாகத்தோடு வருகிற பலவிதமான பிராணிகளுக்கும் தண்ணீர் குடிப்பதற்குத் தங்கள் வீட்டுவாயிலிலோ, தோட்டத்திலோ, ஒரு தொட்டியில் எப்பொழுதும் தண்ணீர் நிரப்பிவைப்பது ஜீவ காருணியமுள்ளவர்கள் செய்யவேண்டிய முக்கியமான காரியமாம். தாகத்தினால் நாவறண்டு தவிக்கும் பிராணிக்கு உடனே தண்ணீர் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? இப்படியே ஒருவருடைய தோட்டத்தில் தண்ணீர் நிரம்பிய தொட்டி யொன்று வைத்திருந்ததையும், அதில் அநேகமான பக்ஷிகளும் அணில் பிள்ளைகளும் அண்டை அயலிடங்களிலுள்ள நாய்களும் பூனைகளும் வந்து தண்ணீர் குடித்துத் திருப்தியடைந்து போனதையும் கண்டு களித்திருக்கிறோம். தம் உயிரைப்போலவே எல்லாவுயிர்களையு மெண்ணவேண்டும்; நாம் தாகத்தால் வருந்தும்போது ஒரு வாய் தண்ணீர் கிடைக்காவிட்டால் எவ்வளவு சங்கடப்படுகிறோம்; வாயில்லா ஜந்துக்களுக்கும் அப்படியேதானே யிருக்கும்? நாமும் உயிருள்ள மற்றெல்லாப் பிராணிகளும் கடவுளுடைய படைப்பேயன்றோ? அப்படியிருக்க, அவைகளில் நாம் நேசிக்கவேண்டியவை இவை, நேசிக்கவேண்டாதவை இவை யென்று இரண்டு பிரிவாக யாராவது பகுத்திருக்கிறார்களோ?

7. **நன்றியில்லாமை.**—தங்களுக்கு வேண்டியவரையிலும் குதிரை மாடு முதலான பிராணிகளிடத்தில் உதவியைப் பெற்றுக்கொண்டு, அவற்றிற்குத் தாம் சிறிதும் பிரதியுபகாரஞ் செய்யாமலிருப்பவர்களைப் பார்க்கிலும் நன்றியற்றவர்கள் வேறுண்டோ? அவைகளிடத்தில் நமக்குள்ள நன்றியை வெளியிடுவதற்கு நாம் அவைகளுடன் அன்பாகப் பேசுவதும், வயிற்றுக்கு உணவும் வசிக்க நிழலும் கொடுப்பதும் தவிர மற்றொன்றுஞ் செய்ய வேண்டுவதில்லையே.

'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

8. குதிரை வேலைசெய்யாமல் வருந்துவதற்குக் காரணம்.—குதிரைகள் வண்டியிழுக்க மாட்டாமல் வருத்தப்பட்டாலும், வேறுவிதமாகத் துன்பப்பட்டாலும், அப்பொழுது அதன் கடிவாளத்தையும் சேணங்களையும் கால் குளம்பையும் பரிசோதித்துப் பாருங்கள். அவ்விடங்களில் ஏதோ சொற்பமான உபத்திரவ மிருக்கும்; அதைப் பார்த்து நீங்கள் சுலபமாகவே சௌக்கியப்படுத்திவிடலாம். பற்களையும் வெகு ஜாக்கிரதையாகப் பிடித்துப் பார்க்க வேண்டும்: தன் அருமையான குதிரை பல் நோவினால் வருத்தப்படுவது தெரியாமல் ஒருவன் அதைத் தன்னாலானமட்டும் அடித்து இம்சித்துக் கடைசியில் விற்றுவிட்டு, அதனால் தான் பெறக்கூடிய நன்மையை இழந்துபோனான்.

குதிரையினது கால் குளம்பின் மெதுவான இடத்தில் ஒரு கல் சிக்கிக்கொண்டு அப்படியே அது இராத்திரி முழுமையும் நின்றுகொண்டிருந்தால், அப்புறம் அந்தக் கால் நிற்கமுடியாமல் பலவீனப்படுமென்பதற்குச் சந்தேகமென்ன? அதனால் அந்தக் கால் நொண்டியானாலுமாகிவிடும். ஆகையால் பிரதி தினம் இராத்திரி குதிரையின் கால்களை நன்றாய்த் துடைத்துச் சுத்தப்படுத்துவது நல்லது.

நியாயமென்பது அன்புடைமையேயாம்; அநியாயமாவது நெஞ்சில் ஈவிரக்க மில்லாமலிருப்பதேயாம்.

9. உதவியற்ற பூனை. — அண்டை வீட்டுப் பெண் ஒருத்தி ஒருநாள் அவளது அருமையான கிழப்பூனை யொன்றைத் தெருவிலே தூக்கிக்கொண்டு போனாள். அந்தப் பெண் அதை யேன் அப்படித் தூக்கிக்கொண்டு போகிறாளென்று விசாரித்ததில், வெளியே வெகுதூரத்தில் வேலிக்கப்பால் அதை யெறிந்துவிடக் கொண்டுபோகிறாளென்று தெரியவந்தது. 'எங்கள் தாயாருக்கு இந்தப் பூனையை வைத்துக் காப்பாற்றுவது அதிகமான அலைச்சலாயிருக்கிறது; ஆகையால் இனிமேல் இந்தப் பூனை எங்களுக்கு வேண்டாம்' என்று அந்தப் பெண்ணே என்னுடன் சொல்லிற்று. அதைக் கேட்டு நான் அந்தப் பூனையை எங்கள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய், அது கிழமாயும் தேகசௌக்கிய மில்லாமலும் வருத்தமுற்றிருந்ததனால், ஐயோ பாவமென்று அதை யோரிடத்தில் படுத்துத் தூங்கும்படி செய்தேன். அப்பொழுது எனக்குத் தோன்றிய தென்னவென்றால், 'இந்தத் தாயார் கிழவியாகி அவளைக் காப்பாற்றுவது கஷ்டமான தசை வந்துவிட்டால், அப்போது அவளுடைய மக்கள் அவளை வேலிக்கப்பால் எறிந்துவிடுவார்கள்போலும்' என்று எண்ணிக்கொண்டேன்.

அன்பு செய்யுவேண்டுமென்கிற விதி உலகத்தில் எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவேயன்றோ? மனிதர்களுக்கு ஒன்று, மற்றப் பிராணிகளுக்கு ஒன்று என கடவுள் வித்தியாச மேற்படுத்தவில்லையே.

10. ஜீவகாருணியமுள்ள ஒரு பெருமாட்டி சொன்னது.—ஜீவகாருணிய விஷயமாகப் பாடுபடுகிற மற்றவர்களுக்கு அதுவிஷயத்தில் அதிகமான உற்சாக முண்டாகும்பொருட்டு ஒரு பெருமாட்டி சொல்லியதை இதனடியில் குறிக்கிறோம்:—எனக்குப் புத்திதெரிந்த நாள்முதல் நாளதுவரையிலும் நான் உலகத்தில் நடக்கிற ஜீவ ஹிம்ஸையாகிய அக்கிரமத்தைக் கண்டு அதிகமான மனவருத்தமுடையவளாகி எப்பொழுதும் அதே விசாரமாய், தங்கள் துக்கத்தைச் சொல்லிக்கொள்ள வாயில்லாத பேதைப் பிராணிகளுக்குத் துணையாகி என் வாழ்நாள் முழுவதையும் அதற்காகவே யொழிக்கலானேன். நமக்கு உதவிக்கு நாம் கடவுளது கையை யெதிர்பார்த்திருப்பதுபோல, அவை நம்முடைய கையை எதிர்பார்த்திருக்கின்றனவே! என் ஜீவகாலம் முழுமையும் நான் எளிய ஜந்துக்களுடைய துன்பத்தைப் போக்குவதற்காக என்னால் கூடியவரையிலும் பாடுபட்டு, அழகான பக்ஷிகளை அநியாயமாகக் கொன்று கொடுமை செய்வது கூடாதென்று தடுக்கவும் வேண்டிய முயற்சிகள் செய்து, அதற்காக அங்கங்கே அநேகவிதமான ஏற்பாடுகள் செய்துவந்தேன்—என்பதாம்.

11. பூனைகடிந்து இறப்பதுண்டோ? — பூனை கடித்து இறந்துபோனதாக ஒருவர் சொன்னதைக் கேட்டு மற்றொருவர் அதற்குச் சமாதானம் சொல்லுகிறார்: பூனை கடித்துச் செத்துப்போனதாகச் சொல்வது முற்றும் பொய்யான பேச்சு; எனது வாழ்நாளில் நான் இப்படிப்பட்ட செய்தியை ஒருநாளும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. நானும் அநேகம் பூனைகளை வைத்து வளர்த்துவருகிறேன்; பூனைமாத்திரமேயல்ல; நாய் முதலான இன்னும் அநேகம் ஜந்துக்களையும் அன்புடன் காப்பாற்றி வருகிறோம்; எங்கள் ஸம்ஸாரமோ மிகப் பெரியது; எங்கள் வீட்டில் பிள்ளை குட்டிகள் பலவுண்டு. ஆனாலும், இதுவரையில் எங்கள் பிள்ளைகளைப் பூனையாவது நாயாவது கடித்ததென்பது ஒருநாளுமில்லை யென்று சொல்லுகிறார்.

12. எல்லா நாய்களும் நல்லவைகளேயோ?—எந்த விஷயத்திலும் நாம் இரண்டு பக்கத்தையும் பரிசோதித்துப் பார்த்தே பேசவேண்டும். நாய்களை வைத்து வளர்ப்பது அபாயத்திற் கிடமானதென்று அநேகர் சொல்வது முழுமையும் பொய் அன்று; அவர்கள் அப்படிச் சொல்வதற்கும் கொஞ்சம் ஆதாரமுண்டு: மூர்க்க குணமும் முரட்டுத்தனமுமுள்ள நாய்களைச் சிலர் வைத்திருக்கிறார்கள்; அதனால் நல்ல நாய்களும் கெட்டவைகளாகின்றன. இதற்கு நாம் செய்யவேண்டிய பரிஹார மென்னவென்றால், அப்படிப்பட்ட பொல்லாத நாய்களை ஒருவரும் வைத்திருக்கக் கூடாதென்று தடுப்பதுதான். சில நாய்கள் வழியே போகிற மற்ற நாய்களுடனே வீணுக்குச் சண்டை தொடுக்கின்றன; சில நாய்கள் பூனைகளைப்பிடித்துக் கொல்லுகின்றன;

சில, மனிதர்கள்மேல் பாய்ந்து கடிக்கின்றன. ஏதேனும் ஒரு மாடு போனாலும் வண்டி போனாலும் எழுந்தோடி மூர்க்கமாகக் குரைக்கின்ற நாயை வைத்திருப்பது பெரிய ஸங்கடமே; வீட்டிற்குள் கட்டிப்போட்டு வைத்தாலும் வாயை மூடிக்கொண்டிராமல் ஓயாது உறுமிக் குரைத்து அக்கம் பக்கத்தாருக்குத் தலைவலி யுண்டாக்குகிற நாய்களை உடனே யொழித்துவிட வேண்டியதே. இப்படியே இராத்திரியில் ஒருவர்க்கும் நித்திரை வரவொட்டாமல் அதிகமாகக் குரைக்கிற நாய்களையும் வைத்திருக்கலாகாது. ஆனால் நாய்களுக்கு இப்படிப்பட்ட துர்க்குணங்கள் அநேகமாய்ச் சொந்தக்காரர்களுடைய உபேக்ஷையினாலேயே உண்டாகின்றன வென்று தெரியவருகிறது. நாய்கள் குரைக்கும் பொழுதும் கடிக்க எழுந்தோடும்பொழுதும் சொந்தக்காரர்கள் வேண்டாமென்று தடுத்தால், அநேகம் நாய்கள் அடங்கிப்போகின்றன.

13. **ஈ மொய்க்கா திருப்பதற்கு மருந்து.**—மாடுகளும் குதிரைகளும் கட்டுத்தறியிலும் மேய்ச்சல் புலங்களிலும் ஈக்கள் மிகுதியாக மொய்த்து அதிகமாய் உபத்திரவப்படுகின்றனவே; அதற்கு இப்பொழுது நல்ல தைலமொன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்தத் தைல வாஸனை பட்டால் ஈக்கள் கிட்ட நாடுவதில்லை; அதை உபயோகப்படுத்தினால், ஈக்களால் வாயில்லா ஜந்துக்களுக்கு உண்டாகிற, வாயினால் சொல்லமுடியாத, வருத்தம் வெகுவாய் ஒழிந்துபோகின்றன. அந்தத் தைலம் வாங்குவதற்கு வேண்டிய செலவும் அத்தனை அதிகமில்லை. ஈக்களின் உபத்திரவம் அதிகமாயிருக்கு மிடங்களிலெல்லாம் இந்தத் தைலத்தைக் கையாண்டுவருவது மிகவும் நல்லது.

14. **யானைகளும் கணக்குக் கூட்டும்.**—வாயில்லாத ஜந்துக்களில் பலவற்றிற்குக் கணக்குக் கூட்ட நன்றாய்த் தெரியும். அவைகளில் முக்கியமாய் யானைகள் கணக்கில் அதிகமான சாமர்த்தியமுடையவை. இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒரு கதை சொல்வது உண்டு: ஒரு யானைக்குப் பிரதிதினம் தீனிபோடுகிற சமயத்தில் தப்பாமல் **இருபது** அப்பங்கள் எண்ணிக்கொடுப்பது வழக்கம். அப்படியே நடந்துவருகையில் ஒருநாள் ஒன்று குறைவாய் அதற்குப் **பத்தொன்பது** அப்பங் கொடுத்தார்கள்; ஒன்று குறைவா யிருப்பதை அந்த யானை உடனே தெரிந்துகொண்டு அதிகமான கோபங்கொண்டு, சரியாய் இருபது அப்பம் எண்ணிவைக்கிற வரையில் அவற்றில் ஒன்றைக்கூடத் தொடாமல் தூர நின்றது; இன்னுமொரு அப்பம் கொண்டு போட்ட பிறகுதான் வழக்கப்படி அவைகளை யெடுத்துத் தின்றதென இந்தக் கதையை ஒரு அதிசயமாய்ச் சொல்லுகிறார்கள்.

மூன்று தோழிகள்.

சிலநாளைக்கு முன்னே சிறு பெண் ஒருத்தி யிருந்தாள். அவளது தாய் தகப்பன்மார் இரண்டு பேரும் நோயும் பாயுமா யிருந்ததனால், அந்தப் பெண் பிரதிதினம் பிச்சையெடுத்தே போஜனம் தேடிக்கொள்ளவேண்டியதாயிற்று.

இப்படியிருக்க ஒருநாள் காலையில் அவளுடைய அருமைத் தந்தை இறந்துபோனார்; தகப்பன் இறந்த சிலநாளைக்கெல்லாம் தாயு மிறந்துபோனாள். ஐயோ பாவம்! அவர்களுடைய சிறு மகள் பிறகு துணை யொருவருமில்லாமல் துக்கத்தோடு தனியே கஷ்டப்பட்டுக்கொண்டு காலங் கழிக்கவேண்டியதாயிற்று.

ஆனாலும் 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்கிறபடி கடவுள் அந்தச் சிறுமியினிடத்தில் கருணைகூர்ந்து அவளுக்கு இரண்டு தோழிகளைத் துணையாகக் கொடுத்தார். அந்தத் தோழிகள் யாரென்று எண்ணுகிறீர்கள்? இரண்டு பூனைக்குட்டிகளாம். அவைகளில் ஒன்று கறுப்பு, ஒன்று வெளுப்பு. பாக்கியமென்கிற அந்தப் பெண் அந்தப் பூனைக்குட்டிக ளிரண்டினிடத்திலும் பிராணனா யிருந்தாள்; பூனைக்குட்டிகளும் ஒரு நிமிஷங்கூட அவளை விட்டுப் பிரியாமல் அவளோடுகூடவே யிருந்து விளையாடிக்கொண்டிருந்தன.

பெற்றோரை யிழந்த துக்கம் மேலிட்டுப் பாக்கியம் புலம்பி வெறுப்படைகிற காலங்களில் இந்தப் பூனைக ளிரண்டும் இரண்டு தோழிகள்போலவே அவளது மடியிலே போய் உட்கார்ந்து விளையாடி, அவளுக்குத் துக்கம் தணிந்து மனக்களிப்பு உண்டாகும்படி செய்யும். விசனப்படுகிற காலங்களில் குழந்தைகள் வந்து விளையாடக் கண்டால், எப்படிப்பட்டவருக்கும் கொஞ்சம் சந்தோஷமுண்டாகுமன்றோ? அந்தக் கஷ்டகாலத்தில் தனக்குப் பொழுது போக்காய் அப்படிப்பட்ட இரண்டு நல்ல தோழிகளைக் கொடுத்ததற்காகப் பாக்கியம் கடவுளிடத்தில் அதிகமான நன்றி பாராட்டினாள்.

இப்படியிருக்கச் சிலநாளைக்குப் பிறகு நெஞ்சுருக்கமுள்ளவளான ஒரு பெருமாட்டி பாக்கியத்தின் வீட்டிற்கு வந்து அந்தப் பெண்மணியின் கஷ்டத்தையும் அவளுக்குப் பூனைக்குட்டிகள் துணையாயிருப்பதையும் பார்த்து ஆச்சரியப்பட்டு, அந்தப் பெண்ணையும் பூனைக்குட்டிகளையும் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்த் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு காப்பாற்றினாள். அவர்கள் தம் வாழ்நாள் முழுமையும் அவ்விடத்திலே சுகமாக வாழ்ந்திருந்தார்களாம்.

வசிக்குமிடத்திலா வளர்ப்பவரிடத்திலா பூனைகளுக்கு விசுவாசம் அதிகம்?

பூனைகளுக்கு நன்றி கிடையாதென்றும், வளர்ப்பவர்களிடத்தில் விசுவாசங் கிடையாதென்றும், வளர்க்கும் மனிதர்களிடத்தி லிருப்பதைவிட வசிக்குமிடத்திலேயே பற்று அதிகமென்றும் பலர் பூனைகளை இகழ்ந்து அலக்ஷியஞ் செய்கிறார்கள். வீட்டிலுள்ளவர்கள் வேறிடத்திற்குக் குடிபோனாலும், அங்குள்ள பூனைகள் அவர்களுடன் போகாமல் அவ்வீட்டிலேயே குடிகொண் டிருக்குமென்றும் குறைவாகப் பேசுகிறார்கள். பூனைகள் தம்முடன் பழகுகிற மனிதர்களை விட்டுப் பிரிவதில்லை யென்பதற்கு மேற்சொன்ன கதை யொன்றே போதுமான திருஷ்டாந்தமன்றோ? அப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் இன்னும் அநேக மிருக்கின்றன. பூனைகளிடத்தில் அன்பு பாராட்டி ஆசையோடு உணவளித்துப் பிரீதியுடனே பேசி அவைகளை யொருபோதும் வருத்தப்படுத்தாம லிருப்பவர்கள், பூனைகளுக்கும் நன்றி பாராட்டும் குண மதிகமுண் டென்பதை அதிசீக்கிரமே கண்டறிவார்கள். தம்மை யார் அதிகமாக நேசிக்கிறார்களோ, அவர்களிடத்தில் பூனைகளும் நன்றி பாராட்டி அதிகமான நேசமுள்ளவையா யிருக்குமென்று உடனே பிரத்தியக்ஷமாகக் காணலாம்.

ஜீவகாருணிய முடையவர்களுக்கு ஒரு நிருபம்.

நான் பிராணிகளிடத்தில் பக்ஷமுள்ளவளாயும், தன் ஊன் பெருக்கத் தான் பிறிது ஊன் உண்ணாத உருக்கமுள்ளவளாயு மிருப்பதனால், இப்பொழுது சில விஷயம் உமக்கு எழுதுகிறேன். நீர் கோமாமிசத்தை உணவா யேற்றுக்கொள்ளாமைக்கு ஏற்ற பல நல்ல காரணங்களை யெடுத்துக் காட்டி, அது முழுமையும் இம்சையான தொழிலாயிருப்பதால் அவ்வுணவை யொழித்திருப்பதாகச் சொல்லி, உமது பத்திரிகையி லெழுதியிருப்பதைப் பார்த்து மிகவும் ஸந்தோஷமடைந்தேன்.

ஜீவகாருணியமுள்ள மனிதர்கள் பலரும், 'ஜீவ ஹிம்ஸை கூடாது, ஜீவ ஹிம்ஸை கூடாது' என்று கூச்சலிட்டுக்கொண்டே அதற்காக அநேகம் சட்டதிட்டங்களும் ஏற்படுத்திவிட்டு, மாமிசக்கடைகள் மேன்மேலும் விருத்தியாகும்படி அதற்குத் துணை செய்துவருவதைப் பார்க்க, எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஆடுமாடுகளைச் சித்திரவதை செய்தாலன்றி மாமிசக்கடைக்காரருக்கு விற்க மாமிச மெங்கிருந்து வரும்? இது, திருட்டுப் பொருளைத் தோளிலே போட்டுக்கொண்டு, தான் திருடவில்லை யென்று மறுப்பதுபோ லிருக்கிறதன்றோ?

ஜீவகாருணியத்தைப்பற்றிப் பலவிதமான பத்திரங்கள் எழுதுவதும், சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவதும் அவசியமானவைகளேயாம். ஆனாலும், ஜீவஹிம்ஸையைத் தடுப்பதற்கு மிகவும் சுலபமான உபாயமாவது, அடித்த ஆடுமாடுகளின் மாமிசத்தை யெவரும் தின்னக்கூடாதென்று தடுப்பதேயாம். நீரும் நாமும் தின்னாமல் விடுவதனாலேயே மாமிசக்கடை வர்த்தக மொழிந்துபோகுமா வென்றால், தப்பாம லொழிந்துபோகும்; முக்கியமான மனிதர்கள் முன் நடந்துகாட்டுகிற நல்ல வழக்கத்தை மற்றவர்களும் அநுஸரிக்கத் தலைப்பட்டுத் தம்முடைய கெட்ட வழக்கங்களைத் தப்பாமல் கைசோர விடுவார்கள். ஊனுணவு உண்ணாத கொள்கை மிகவும் உத்தமமானதென்று தெரிந்து இப்பொழுது பலர் மரக்கறி பதார்த்தங்களையே மேலாகக் கொண்டாடுகிறார்கள்.

உயிர்களிடத்தில் அன்பும் அருளும் உடையவர்களாயிருப்பது யாவருக்கும் மிகவும் நல்லதே. தம் கண்ணெதிரே அந்தப் பிராணிகள் கொலையுண்டு உயிரிழக்கப் பார்த்திருந்து அவற்றை உண்பவர்கள் ஜீவகாருணிய முடையவ ராவார்களோ? பிராணிகளிடத்தில் அன்புள்ளவர்கள் மாமிச போஜனஞ் செய்யக்கூடா தென்பதற்குக் காரணங்களை மாத்திரமே யெழுதப் புகுந்தால், ஒரு பெரிய புஸ்தகமாகும்; தங்களுடைய தேகத்தில் அபிமானமுள்ளவர்கள் ஊனுணவை விலக்கவேண்டு மென்பதற்கு ஏற்ற நியாயங்களை யெடுத்துச் சொன்னால், மற்றொரு பெரிய புஸ்தகமாகும். மேலும், யானை, ஒட்டகம், குதிரை, ஆடுமாடு முதலான வலிவுள்ள மிருகங்களுக்கு எப்படி ஊனுணவு அவசியமில்லையோ, அப்படியே மனிதர்களுக்கும் மாமிச போஜனமவசியமில்லை யென்பதற்கு உள்ள ஆதாரங்களையும் திருஷ்டாந்தங்களையு மெடுத்தெழுதப் புகுந்தால், அதனிலும் பெரியதான புஸ்தக மெழுதலாம்.

நாமிப்படி யெழுதுவதனால், வாதாடுகிறோமென்றாவது, நிர்ப்பந்திக்கிறோமென்றாவது ஒருவரும் நினைக்கலாகாது; பிராணிகளிடத்தில் பக்ஷமுள்ளவர்களென்று சொல்லுகிற பலரையும் இதைப் படித்துப் பார்க்கும்படி வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வாயில்லாத ஜந்துக்களை நாம் நமக்கு நண்பர்களென்று சொல்லலாம்; நாம் அவற்றிற்கு நண்பராகத் தகுதியுடையவர்களாகமாட்டோம்: மாமிசபக்ஷிணிகளென்று பிரசித்தமான மிருகங்கள்கூடத் தமக்கு விரோதியான விலங்குகளையே வதைக்கின்றன; மனிதர்களோ, தம்முயிரினும் அன்பாக வளர்த்த அருமைப் பிராணிகளை வதைத்து வயிற்றிலிடுகிறார்களே!

நமக்கு உதவியான வாயில்லா ஜந்துக்களைப் பாதுகாக்கும் வகை.

நாய்களின் காதுகளையாயினும் வாலையாயினும் ஒருபொழுதும் அறுக்கலாகாது. காதுகளைக் கத்தரித்துவிட்டால், மண்ணோ, மணலோ, வேறுவிதமான அழுக்குகளோ, காதுக்குள் புகுந்துகொண்டு அந்தப் பிராணிக்கு மிகுந்த துன்பத்தை யுண்டாக்கும்; சில சமயம் காதே செவிடாகிவிடும்; அவ்விடத்தில் கட்டிகள் புறப்பட்டாலும் புறப்படும். இவைகளையறிந்துதானே அவற்றைப் படைத்த கடவுள் செவியென்கிற பொறிக்கு ரக்ஷணமாக மேலே காதை அமைத்திருக்கிறார். இப்படிப் பிராணிகளின் சவுக்கியத்திற்காக ஸ்வாமி கொடுத்திருக்கிற காதை நாம் அறுத்துவிடுவது அவருக்குப் பிரியமாயிருக்குமோ? ஒருபோதும் பிரியமாயிராது. ஆனால் நல்ல காலமாய் அப்படி அறிவுகெட்டு நாய்களின் காதுகளை யறுக்கிற கெட்டவழக்கம் இக்காலத்தில் அதிகமாயில்லை. ஜீவகாருணியத்தை யெண்ணி இப்படிப்பட்ட கொடுமைகளைக் கைவிடாதவர்கள் கடவுளுடைய கொடிய தண்டனைக்கு ஆளாவார்கள்.

சவாரி போகும்போது நாய்களை வண்டியின்பின்னாலே கட்டிவிடுகிற கெட்ட வழக்கம் சிலருக்கு உண்டு. அப்படிச் செய்வது மிகவும் கொடுமையானது. ஏனென்றால், அப்படி வண்டியின் பின்னேயே ஓடி அந்த ஜீவன் களைத்துப்போனால், பிறகு அது என்ன செய்யமாட்டும்? சற்று நின்று இளைப்பாற்றிக்கொள்ள அதற்கு ஒரு வழியுமில்லை; கடைசியில் கைகாலெல்லாம் முழுமையும் சோர்ந்து போகுமளவும் அது ஓடித்தானே தீரவேண்டும். ஆகையால் சவாரிபோகும்பொழுது நாயைக் கூடவே கூட்டிக்கொண்டு போகவேண்டுமானால் அந்த எளிய பிராணியை வண்டிக்குள்ளேயே உட்கார வைத்துக் கொண்டுபோவது உத்தமம்.

ஜீவகாருணியமுள்ள சகலமான மனிதர்களுக்கும் நாம் முக்கியமாய்த் தெரிவிப்பதாவது:—ஒவ்வொருவரும் தமது வீட்டிற்கு வெளியே ஆடுமாடுகள் முதலான வாயில்லாத ஜந்துக்கள் வந்து சுகமாய்த் தண்ணீர் குடித்து இளைப்பாறிப் போகும்படி பெரியதாய் ஒரு கல் தொட்டியோ, மண் தொட்டியோ வைத்து, அதில் தண்ணீரும் நிரப்பிவைத்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும்? நாம் செய்யும் இந்தச் சொற்பமான காரியம் பலவற்றிற்குப் பொறுக்கமுடியாத இளைப்பைத் தணித்துப் பெரிய சுகமுண்டாக்குமன்றோ?

'சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனின் தாழ்வரோ தாழார்.........'

என்றபடி இந்தச் சொற்ப காரியஞ்செய்து மிகவும் பெரிதான புண்ணியத்தைத் தேடிக்கொள்ளக் கூடுமென்றால், அப்படிச் செய்யாமலிருப்பது பெரிய மூடத்தனமன்றோ?

ஜீவகாருணியம் கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்குரிய சில விதிகள்.

வித்தியார்த்திகளின் படிப்பை மேன்மேலும் விருத்திசெய்ய விரும்புகிற உபாத்தியாயர்களுக்கு அப்படிச் செய்ய அநேகம் நல்ல தருணங்கள் வாய்க்கின்றன. பிள்ளைகளுக்குப் படிப்பை விருத்தி செய்வதாவது, பிள்ளைகளுடைய சற்குணமும் தரும புத்தியும் மேலும் மேலும் விருத்தியடையும்படி செய்வதேயாம். இக்காலத்தில் உபாத்தியாயர்கள் அநேகர், பிள்ளைகள் பரீக்ஷை கொடுத்துப் பட்டப்பெயர் பெறுவதே படிப்பு விருத்தியானதற்கு அடையாளமென்று நினைக்கிறார்கள்; அதுமாத்திரமே போதாது; இனி தலையெடுக்கப்போகிற பின்சந்ததியாரை மேலான நிலைக்குக் கொண்டு வந்து, அவர்களை மிகவும் உபயோகமுள்ள நல்ல ஸ்திரீகளும் புருஷர்களுமாகவும், நல்ல ஸகோதரர் ஸகோதரிகளாகவும், நல்ல புருஷர் பெண்சாதிகளாகவும், நல்ல குமாரர் குமாரத்திகளாகவும் செய்விக்கவும் முக்கிய ஸாதனமாயிருக்கவேண்டும். இவ்விதமான படிப்பின் அஸ்திவாரம் முதலிலே பாடசாலைகளில் வெகு ஜாக்கிரதையாயும் கருத்தாயும் அமைக்கப்படுமானால், இவ்வுலகம் முழுமையுமே உத்தமமான ஸ்திதிக்கு வந்துவிடும்; எப்படிப்பட்டவருக்கும் சுகவாழ்க்கை யுண்டாகும். அந்த அஸ்திவாரமாவது, ஜீவகாருணியமேயாம்.

வீடுகளிலாயினும் பாடசாலைகளிலாயினும் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவும் நற்புத்தி போதிக்கவும் ஏற்பட்டிருப்பவர்கள் முக்கியமாய், ஜீவகாருணியத்தின் சொரூபம் இப்படிப்பட்ட தென்பதையும், வாயில்லா ஜந்துக்களைப் பாராட்டவேண்டிய மற்றும் பலவகைகளையும் பயிற்சி செய்விக்கவேண்டும். இப்படி ஜீவகாருணியம் பிள்ளைகளுக்குப் பழக்கமாகிவிடுமானால், பிறகு அப்பிள்ளைகள் இனிய பேச்சுக்களே பேசுவார்கள், அவர்கள் செய்யும் காரியங்களெல்லாம் பரோபகாரமாகவேயிருக்கும்; சிறியவனோ பெரியவனோ, ஆணோ பெண்ணோ, எந்த மனிதனையாயினும் மிருகங்களையாயினும் பிறர் துன்பப்படுத்தக் கண்டால், தம்மாலானவரையில் பாடுபட்டு அவைகளைக் காப்பார்கள். உள்ளத்தில் அன்பென்பது ஒன்று அமைந்திருக்குமானால், எப்பொழுதும் சண்டையும் கூச்சலுமாயுள்ள சிறு பிள்ளைகள் நிறைந்த குடும்பத்தை அது சந்தோஷமும் பரோபகார சிந்தையும் நெஞ்சுருக்கமும் தைரியமுமுள்ள மனிதர்கள் நிறைந்த நல்ல குடும்பமாக்

கிவிடும். அன்பும் அபிமானமுமுள்ளவர்களா யிருப்பதற்கு அதிகமான தைரியம் வேண்டுமேதவிர, கொடியவர்களாவதற்குத் தைரியம் சிறிதும் வேண்டுவதில்லை.

முரடர்களாயிருப்பது கையிலாகாத பயங்காளிகளுடைய காரியமென்பதைத் தெரிந்துகொள்ளாமையாலேயே அநேகம் மனிதர்கள் ஸ்திரீகளிடத்திலும் சிறு பிள்ளைகளிடத்திலும் அதிகமான கொடுமை செய்கிறார்கள். ஆண்மைக்கு அடையாளம் முரடர்களாயிருப்பதுதானென்று அவர்கள் எண்ணினார்கள்போலும்.

இப்படியே, தம்மைப்பார்க்கிலும் சிறுவர்களான பிள்ளைகளையும், அணில் முதலான எளிய பிராணிகளையும் பிடித்துப் பலவிதமாக வருத்தப்படுத்துவதும், அவைகளின்மேல் கல்லை யெடுத்தெறிவதும் பயங்காளிகளான பேதைகள் செய்யும் காரியமென்பதைத் தெரிந்துகொள்ளாமையாலேயே அநேகம் பிள்ளைகள் இப்படிப்பட்ட பொல்லாத செய்கைகள் செய்கிறார்கள். இப்படிச் சில பிள்ளைகள் கூடிக் கல்லை யெடுத்து எறிந்துகொண்டிருப்பதைப் பார்த்து நான் ஒருநாள் அவர்களைக் கண்டு, 'குழந்தைகளே! நீங்கள் கல்லை யெடுத்தெறிய வேண்டுமானால், உங்களுக்குச் சரிவயதான பிள்ளைகளைக் கூப்பிட்டு அப்படிப்பட்டவர்களின்மே லல்லவோ கல்லைப்போட்டு உங்கள் திறமையைப் பார்க்க வேண்டும்? உங்களைப்பார்க்கிலும் மிகவும் பலவீனமான பேதை ஜந்துக்களின்மேல் கல்லெறிவது கையிலாகாதவன் செய்கிற இழிவான செய்கையல்லவா? நீங்கள் என் ஒருவர்மீது ஒருவர் கல்லை எறிந்துகொள்ளக் கூடாது?' என்று கேட்டேன். அந்தப் பிள்ளைகள் அதற்குப்பிறகு ஒருபொழுதும் அப்படிப்பட்ட கேடுகெட்ட விளையாட்டு விளையாடினதாகத் தெரியவில்லை.

கையிலாகாத கொடியவனென்றும், அற்பனான அயோக்கியனென்றும், தம்மைப் பிறர் நினைக்க ஒருவரும் விரும்பார்கள். ஆகையால், குதிரை, நாய், பூனை, அணில், தவளை முதலான பிராணிகளின்மேல் கல்லை யெடுத்தெறிவது பயங்காளிகளான அற்பர்கள் செய்யும் இழிவான காரியமென்றும், தைரியசாலிகளான நல்ல பிள்ளைகள் அப்படி ஒருபொழுதும் செய்யமாட்டார்களென்றும் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் போதித்தால், அவர்கள் உடனே அதை அறிந்துகொண்டு நல்ல வழிக்கு வந்துவிடுவார்கள்.

நெஞ்சுருக்க முள்ளவர்களாயிருக்கும் உத்தம குணத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கப் பெரியவர்கள் அதிகமாகப் பாடுபடவேண்டும். இப்படிச் சிறுவர்களுக்கு அன்புள்ள குணத்தைப் போதிக்கப் பெரியவர்கள் பிரயாசை அதிகமாக எடுத்துக்கொள்வார்களானால், ஜீவஹிம்ஸை யெங்கு மதிகமாயிருக்கிறதென்கிற கூச்சல் அதிசீக்கிரத்தில் அடங்கிப்போய்விடும்; ஜீவஹிம்ஸை நிவாரண சபையார் அதற்காகப் படுகிற பிரயாஸையும் படிப்படியாய்க் குறைந்து, உலகமெங்கும் உபத்திரவமென்பது ஒழிந்துபோகும்.

உயிருள்ள ஜந்துக்கள் சகலமும் சுகமாக வாழ்ந்திருக்கவேண்டும். விவேகமுள்ளவர்களான மனிதர்கள் ஒவ்வொருவரும் சகலப் பிராணிகளுக்கும் தம்மாலானவரையிலும் பாடுபட்டுச் சவுக்கியமுண்டாக்க முயலவேண்டும். பிராணிகள் சுகமாக வாழ்வதைப் பார்த்தால் சந்தோஷப்படவும், பிராணிகள் சங்கடப்படுவதைப் பார்த்தால் விசனப்படவும் சிறு பிள்ளைகளுக்கும் சிறு பெண்களுக்கும் பழக்கிவைக்கவேண்டும். மிகவும் அற்பமான பிராணியானாலும் அதன் வருத்தத்தைப் பார்த்துப் பரிதாபப்படாதவன், சுய நயத்தையே பெரிதாகப் பார்க்கிற கல்நெஞ்சனாகிறான். எளிய வாயில்லாத ஜந்துக்களுடைய வருத்தத்திற்குத் தாமே காரணமாகி, அவற்றை வருத்தப்படுத்துவதைத் தமக்கு ஒரு விளையாட்டென்று நினைப்பது, கொடுந்தன்மைக்கும் இழிவான சுபாவத்திற்கும் அறிகுறியாகும். சிறு பிள்ளைகள் முதலில் ஆலோசனை யில்லாமையாலேயே கொடிய செய்கைகள் செய்யத் தலைப்படுகிறார்கள்; அத்தன்மையான பிள்ளைகளுக்கு ஜீவகாருணியம் இப்படிப்பட்டதென்பதைக் கற்பித்துவிடுவோமானால், அது அவர்களுக்கு ஒரு பெரிய நன்மை யாவதோடுகூட, இவ்வுலகம் முழுமைக்குமே ஒரு மகத்தான பாக்கியமாகிவிடும்.

ஜீவஜந்துக்களிடத்தில் அபிமானமுள்ளவர்கள் அனைவரும் திக்கில்லாத நாய் பூனை முதலியவற்றிற்கு நல்ல வாஸஸ்தானம் அமைத்து, அங்கே அவைகளுக்கு வேளை தவறாமல் தீனிபோட்டு, வேண்டும்போது தண்ணீர் குடிக்கப் போதுமான அளவு தண்ணீரும் சேர்த்து வைக்கவேண்டும். இராக்காலங்களில் அவைகள் அங்கே வந்து சுகமாய்ப் படுக்கும்படி செய்யவேண்டும். அவைகள் வெளியே ஓடி ஆதரிப்பாரில்லாமல் அல்லாடும்படி விடலாகாது. இப்படிப்பட்ட எளிய பிராணிகளிடத்தில் அன்புள்ளவர்களான நல்ல மனிதர்களே அவைகளை வைத்து வளர்க்க விருப்பம் கொள்ள வேண்டும். நம்மோடு கூடவேயிருந்து பழகும் பிராணிகள், தங்களிடத்தில் பிரீதி பாராட்டும்படி நம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றன; பசித்தபோது போஜனம் கொடுக்கவும் வணங்கி வேண்டுகின்றன.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1903.